முருகப்பெருமான் துணை

**மகான் பெரியாழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.01.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானசபையாம் அரங்கனின்
   ஞானிகள் படைகள் நிறைந்த
   ஞானக்குடிலாம் ஓங்காரக்குடிலில்
   ஞானபண்டிதன் அருள்பெருகி நிற்க
2. நிற்கவே உலகமக்களெல்லாம்
   நிலமதனில் ஓங்கார குடிலுக்குவர
   அற்புதம் அடைவரெனக் கூறி
   அருளுவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை பிலவகலை திங்கள்
   அறிவிக்க தசதிகதி கதிர்வாரம்
   (பிலவ வருடம் தை மாதம் 10ம் நாள், 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை)
   ஆசிதனை பெரியாழ்வார் யானும்
   அருளுவேன் உலகநலம் காண
4. காணவே கலியுகத்தினில் படைத்த
   காப்புதரும் ஞானிகள் சபை
   ஞானதேசிகன் வாழுகின்ற
   ஞானக்குடில் ஓங்காரக்குடிலே
5. குடிலுக்குள் மகா சக்திகள்
   குறைவின்றி அன்னதானபலம்
   தேடியே காத்தருள் புரிந்துவர
   தேசிகனை நோக்கி வருபவர்கள்
6. வருபவர்கள் குடிலில் தங்கி
   வாசம் செய்து தவமியற்றி
   குருவே என தருமம் தன்னில்
   குறைவிலா பொருளுதவிசெய்து
7. செய்துமே பிரணவக் குடிலின்
   சிறப்பமுது அருளமுது உண்டு
   மெய்ஞான தீட்சை அடைந்துவிட
   மேலவர்கள் ஆசி கிடைப்பதுடன்
8. கிடைப்பதுடன் வினைகளை கடந்து
   குருவாகவும் ஞானத்திருவாகவும்
   தடையின்றி நிலைகள் உயர்ந்து
   தரணியில் தனித்துவம் அடைவர்

9. அடையவே இந்த அற்புதம்
அளவிலா சக்தியாக மக்களிடை
தடையின்றிப் பெருகிவர
தரணியோர் ஞானவான்களாகி

10. ஆகியே ஞானத்தலைமைகள்
ஆறுமுகனாரை ஏற்றவண்ணம்
அகிலமே மாற்றம் கண்டு
அமைந்திடும் ஞானஆட்சிக்காலம்

11. காலமதில் அரங்க ஞானியை
கயிலைநாதன் சேய்மகா சக்தியை
கோலமதாய் கண்டுத் தேறிட
குடிலுக்கு உலகோரே சடுதி வாருங்கள்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–